//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No:CC.No.118/2023**

**prosecution witness: PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused absent.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாண்டியராஜன் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**<u>19.03.2024</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

1.நான் மண்டபம் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2022ம் தேதி அதே காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து காலை 09.30 மணியளவில் கோட்டைச்சாமி, நிலைய சார்பு ஆய்வாளர் தலைமையில் நானும், கா.1494 ஊர்க்காலன் ஆகியோர் மரைக்காயர் பட்டிணம்சோதனைச் சாவடியில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது மண்டபத்திலிருந்து வேதாளை நோக்கி வந்த ஆட்டோவை TN 65 AD 634 வாகனத்தை சோதனை செய்தபோது அதில் விற்பதற்காக திருட்டுத்தனமாக கொண்டு சென்ற பிராந்தி பாட்டில்கள் இருந்தன. மானிட்டர் 98, ஜெட் –38, மொத்தம் 338 பாட்டில்கள் இருந்தன. அதில் half பாட்டில்கள் மூன்று சாக்குப்பைகளில் இருந்தது. அதன்பின்புபார்த்தபோது ஆட்டோ ஓட்டி வந்தவர் ராமசந்திரன் மகன் மூர்த்தி என்ற வேல்முருகன் ஆவார்.

2. அவரை ஆட்டோவுடன் காவல்நிலையம் கொண்டு வந்து பின்பு தனிநபர் சாட்சிகள் முன்வராததால் எனது முன்னிலையிலும், கா.ஊர்க்காலன்

முன்னிலையில் வழகககு சொத்துக்களை அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். பின்னர் எதிரி மீது வழக்கு பதிவு செய்த விபரம் எனக்கு தெரியும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1.சாக்குப்பைகளில் 338 பாட்டில்கள் விற்பதற்காக திருட்டுத்தனமாக கொண்டு வந்ததாகத்தான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை எங்கு வைத்து எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் சம்பவத்தன்று நிலையத்தில் வைத்து மதியம் 12.00 மணி இருக்கும்.

2.நாங்கள் தற்செயலாக ரோந்து சென்றோமா இல்ல இரகசிய தகவல் கிடைத்து ரோந்து சென்றோமா என்றால் தற்செயலாகத்தான் ரோந்து சென்றோம். காவல்நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு யார், யார் எந்த வாகனத்தில் சென்றீர்கள் என்றால் காலையில் 08.30 மணிக்கு காவல்நிலையத்தில் இருந்து அவரவர் இருசக்கர வாகனத்தில் கிளம்பினோம்.

3.சம்பவ இடத்தில் போலீஸ் பீட் உள்ளது அங்கே எப்போதும் காவலர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். அதே போல் அந்த இடத்தில் உள்ள கடைகள் மற்றும் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தில் உள்ள நபர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

4. அந்த காலகட்டத்தில் இதுபோன்ற புள்ளிவிபரத்திற்காக நிறைய வழக்குகள் போடப்பட்டது என்றால் சரிதான். எதிரி எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சி செய்தாரா என்றால் ஓடவில்லை. எதிரிக்கு ஆட்டோ எதுவும் ஓட்ட தெரியாது, லைசென்ஸ் எதுவும் கிடையாது என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் இந்த வழககில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து பொய்யாக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கம், எதிரிக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது மேலதிகாரி

என்பதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/—S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்

//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No:CC.No.118/2023**

**prosecution witness: PW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

Accused absent.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஊர்க்காலன் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>19.03.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

1.நான் மண்டபம் காவல்நிலையத்தில் Grade-1 காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2022ம் தேதி காலை 09.30 மணிக்கு நானும், தலைமைக் காவலர் அ.சா.1 மற்றும் சார்பு ஆய்வாளர் கோட்டைச்சாமி தலைமையில் மண்டபம் காவல் எல்லைக்குட்பட்ட மரைக்காயர் சோதனை சாவடியில் வாகன சோதனை செய்து வந்தபோது மண்டபத்திலிருந்து வேதாளை நோக்கி TN 65 AD 0634 என்ற எண் கொண்ட bajaj auto வாகனத்தை சோதனை செய்த போது அந்த ஆட்டோவை ஓடி வந்த ஓட்டுநர் ஆட்டோவை நிறுத்தி விட்டு இறங்கி ஓடிவிட்டார். வளைத்து பிடித்து விசாரித்தபோது வேதாளையைச் சேர்ந்த ராமச்சந்திரன் மகன் வேல்முருகன் என தெரியவந்தது. ஆட்டோவை சோதனை செய்தபோது பிளாஸ்டிக் சாக்குமூட்டையில் மதுபாட்டில்கள் இருந்தது. 180 Ml அளவுள்ள பாட்டில்கள் 390, 375 ml அளவுள்ள பாட்டில்கள் 99 மொத்தம் 459 மதுபாட்டில்கள் இருந்தது.

2. தனிநபர் சாட்சி யாரும் முனவராததால் சார்பு ஆய்வாளர் அ.சா.1 பாண்டியராஜன் முன்னிலையிலும், எனது முன்னிலையிலும் மேற்படி

மதுபாட்டில்களையும், எதிரி ஓட்டி வந்த ஆட்டோவையும் அத்தாட்சியில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1.ஆட்டோவை ஓட்டி வந்த ஓட்டுநர் இறங்கி ஓடிவிட்டார் மற்றொரு நபர் ஆட்டோவிற்குள் அமர்ந்திருந்தார் என்றால சரிதான். ஆட்டோவில் அமர்ந்திருந்த நபருக்கு பாட்டில்கள் விசயங்கள் தெரிவதற்கு வாய்பில்லை என்றால சரிதான். ஆட்டோவையும், ஆட்டோவில் அமர்ந்திருந்த நபரையும் காவல்நிலையத்திற்கு அழைதது சென்று அங்கு வைத்துதான் அனைத்து ஆவணங்களும் தாயர் செய்து பின்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான்.

2. அந்த காலகட்டத்தில் இதுபோன்ற நிறைய வழக்குகள் புள்ளி விபரத்திற்காக போடப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் தான் இந்த வழக்கும் பதிவு செய்யப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை சார்பு ஆய்வாளர் தான் விசாரணை செய்தார். இந்த வழக்கில் புகார்தாரர் எனது மேலதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான்.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்